நாள்: 29.02.2024
OS.3/2018
பெயர்: வீரலட்சமி
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கை நான் என் தம்பி மீது தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் பிறந்த மகேஸ்வரி என்ற சகோதரி உள்ளார். என் அக்கா எந்த வழக்கும் என் தம்பி மீது தாக்கல் செய்யவில்லை. எனக்கு திருமணமாகி 30 ஆண்டுகள் இருக்கும். என் அக்காவுக்கு திருமணமாகி 35 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரிதான். என் தந்தை உயிருடன் இருக்கும்போது எனக்கும் என் அக்காவுக்கும் தகுந்த சீர் சீராட்டுகள் செய்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தம்பி அழகர்ராஜா ஆனைமலையன்பட்டியில் உள்ள தாவா 1வது லக்க சொத்தான வீட்டில் எனது பெற்றோருடன் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். நான் 3 லக்க சொத்துக்களைக் காட்டி பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2வது லக்க சொத்தில் கடையும், 3வது லக்க சொத்தில் கடையும், வீடும் உள்ளது. 1வது லக்க சொத்தான வீடு எனது அப்பா கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். 1974ல் என் தந்தை கிரையம் வாங்கும்போது காலிமனையாகத்தான் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 1வது லக்க சொத்து 7 1/2 செண்டு இருக்கும். 2வது லக்க சொத்து 409 1/2 சதுரடி கொண்ட நிலமாகும். 3வது லக்க சொத்து 488 சதுரடி கொண்ட இடம். 1வது லக்க சொத்தை காலியிடமாக எனது தந்தை கிரையம் வாங்கி 1988ல் வீடு கட்டினார். 1988ல் தான் கட்டிடம் கட்டிடம் கட்டி முடித்துவிட்டார். எப்பொழுது கட்டிடம் கட்ட துவங்கினார் என்று எனக்கு தெரியாது. நான் சிறு குழந்தையாக இருந்தேன். 7 1/2 செண்டில் எவ்வளவு பரப்பில் வீடு கட்டினார் என்றால் முழுச்சொத்திலும் கட்டிவிட்டார். 2, 3 லக்க சொத்துக்கள் என் தாயார் சொத்துக்கள் ஆகும். 3வது லக்க சொத்தான கடையும் வீடும் வாங்கும்போது ஆர்.சி.சி.போட்ட கட்டிடம் தான். 2வது லக்க சொத்து வாங்கும்போது கூரையாக இருந்தது. அதற்கு பின்னர் நானும் என் தந்தையும் சேர்ந்து கட்டினோம். 2017ல் 2வது லக்க சொத்தில் புதிய கட்டிடம் கட்டினோம். வழக்கு 2018ல் தாக்கல் செய்யும்போது நான் ஆனைமலையன்பட்டியில்தான் குடியிருந்தேன். நான் போட்ட பிராது 6வது பத்தியில் நான் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் சென்னையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2வது லக்க சொத்தில் என்தந்தையும் என் தம்பியும் சேர்ந்து தான் பழைய கூரை கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய ஆர்.சி. கட்டினார்கள் என்றால் சரியல்ல. அந்த கட்டிடம் கட்டிக்

கொண்டிருக்கும்போது என் தந்தை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்த சமயம் கட்டிடம் கட்டப்படாமல் பாதியில் நின்றது என்றால் சரியல்ல. என் தம்பி தான் என் தந்தையை பராமரிது வந்ததால் 1வது லக்க சொத்தைப் பொறுத்து என் தந்தை 29.06.2017ல் ஒரு உயில் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உயில் ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் திருமணமாகி வெளியூர் சென்றுவிட்டேன் என்றும், அதனால் என் தம்பிக்கு எனது தந்தை உயில் எழுதிய விபரம் தெரியாது என்றால் சரிதான். 2, 3 லக்க சொத்தை என் அம்மா 17.05.2012லேயே என் தம்பிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அம்மாவுக்கு இருதய நோய் இருந்தது என்றால் சரிதான். அதனால் அவர் சேலம் விநாயகா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் இருதய நோய் காரணமாக 26.09.2014ல் காலமாகிவிட்டார். நானும் என் தாயாரை கடைசிவரை பார்த்தேன். நான் மருத்துவமனைக்கே வரவில்லை என்றும், 1ம் பிரதிவாதி அழகர்ராஜாதான் என் தாயாரை உடன் இருந்து கடைசி வரை பார்த்தார் என்றால் சரியல்ல. என் தந்தை புற்றுநோய் காரணமாக 11.07.2017ல் காலமாகிவிட்டார். நான் தான் என் தந்தையைப் பார்த்தேன். 1ம் பிரதிவாதிக்கு என் தாயாரும், தகப்பனாரும் 2012, 2017 வருடங்களில் ஒரு உயில் எழுதிக்கொடுத்து, அந்த உயில் ஆவணங்களின்படி 1ம் பிரதிவாதி தான் சொத்தின் முழு உரிமையாளர் என்ற முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது. எனது தாய் தந்தையின் கடைசி ஈமக்கிரியை சடங்குகளில் நான் கலந்து கொண்டேன். அப்போது நான் என் தந்தையினுடைய புரோநோட்டுகள் மற்றும் ஆவணங்களை எடுத்துச்சென்றதால் என் தம்பி என் மீது ராயப்பன்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் கொடுத்தார். ஆனால் அது பொய்யான புகாராகும். என் தம்பியிடம் தான் அனைத்து ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும் என என் அப்பா எழுதி வைத்திருந்ததால் காவல்துறையினர் நான் எடுத்துச்சென்ற ஆவணங்களை கொடுக்க வேண்டும் என என்னிடம் கூறினார்கள் என்றால் சரியல்ல. அதனால் நான் கோபமடைந்து 2ம் லக்க சொத்தான கடையை உடைத்துவிட்டு உள்ளே சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 2வது லக்க கடையில் போலிசார் தான் என்னை இருக்கச் சொன்னார்கள். நான் தான் பல அடியாட்கள் மூலம் 2வது லக்க சொத்து கடைக்குள் சென்று விட்டேன் என்றால் சரியல்ல. 2வது லக்க சொத்தை என் தாயார் எனக்கு எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் கொடுக்க

வில்லை. ஆனால் அந்த சொத்துக்கான ஆவணத்தை என் கையில் ஒப்படைத்தார். எந்த ஆவணமும் என் தாயார் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றும், நான் என் அப்பா இறந்த சமயம் ஆவணங்களை எடுத்துச் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எடுத்துச்சென்ற ஆவணங்களை கொடுக்கச்சொல்லி போலிசார் வற்புறுத்தியதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 2018லேயே வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரும் பின்னரும் என் தம்பி என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு விபரங்களை படித்துப்பார்த்து தான் தாக்கல் செய்தேன். சொத்தின் மதிப்பீடு எவ்வளவு சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கில் காலிமனைக்கு தான் மதிப்பீடு செய்துள்ளேன். கட்டிடத்திற்கான மதிப்பு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1வது லக்க சொத்தின் கட்டிடத்தின் மதிப்பு 2017ல் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. தற்போதைய மதிப்பும் தெரியாது. 2, 3 லக்க கடைகளின் மதிப்பு எவ்வளவு என்று தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும்போது கட்டிட பொறியாளரை வைத்து மதிப்பீடு செய்து அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் வீடு கட்டுவதற்கு மதிப்பீடு வாங்கினேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். எந்த மதிப்பீடும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 லக்க சொத்துக்களின் மொத்த மதிப்பீடு ரூ.50 லட்சம் பெறும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்ய அதிகார வரம்பு கிடையாது என்றால் சரியல்ல.இந்த வழக்கிற்கு பின்னர் என் தம்பி மீது தேனி மாவட்ட நீதிமன்றத்தில் OS.253/2021 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் 21.07.2022ல் என் தம்பிக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா சொத்தில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யான வழக்கை தாக்கல் செய்ததால் தான் என் அக்கா என்னுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்ய வரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.